**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 01-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**(வாதி ஆஜர் இல்லை. 5, 14, 16 பிரதிவாதிகள் ஆஜர். 3, 4, 6 முதல் 13 , 15 , 17 முதல் 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

அ.வ.எண்.932/2015

வா.சா.1 சிவசண்முகம்

<u>6 மற்றும் 7ம்பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. தாவா 3ம் அயிட்ட சொத்து ரீ.ச.எண்.256/2 மற்றும் 256/3 அதில் 1.50 ஏக்கர் பூமி என் தாத்தா சென்னிமலைகவுண்டருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா இறந்தபிறகு என் தகப்பனார் என் அத்தைகள் ராமாயம்மாள், தங்கம்மாள், லட்சுமி, நான் எனக்காகவும் மற்றும் அப்போது மைனராக இருந்த வாதி மற்றும் 5ம் பிரதிவாதிக்காகவும் மற்றும் என் சகோதரர்கள் செல்வராஜ், கதிர்வேல் ஆகியோர்கள் சேர்ந்து 08.11.2000ம் தேதியில் வா.சா.6 ஆவணம் மூலமாக 6, 7 பிரதிவாதிகளான வடிவேல் மற்றும் குப்புசாமிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

2. 6, 7 பிரதிவாதிகள் கிரயம் பெற்றதிலிருந்து மேலேகண்ட 3ம் அயிட்ட சொத்தில் சுவாதீனம் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் 5ம் பிரதிவாதியின் நலனுக்காக தான் நான் செயல்பட்டு வந்தேன் என்றால் சரிதான். 6, 7 பிரதிவாதிகள் முதாதையர் சொத்தில் ஒரு பகுதியான 30 செண்டை செக்குப்பந்தி கண்டு 28.01.2002 தேதியில் வா.சா.7 ஆவணம் மூலமாக கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. 6 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்தில் சுவாதீனம் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் தாத்தாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் இறப்பிற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் என் தகப்பனார்

வாரணாசிகவுண்டர் மற்றும் என் அத்தைகள் ராமாயம்மாள், தங்கம்மாள், லட்சுமி ஆகியோர்களுக்கு அயிட்டம் 3 சொத்து பாத்தியப்பட்டு அவர்கள் மட்டும் கிரயத்தில் கையெழுத்து செய்திருந்தால் போதும் என்றாலும், 6, 7 பிரதிவாதிகள் முன்ஜாக்கிரதையாக என்னிடமும், என் சகோதரரிடமும் மற்றும் வாதி, 5ம் பிரதிவாதி ஆகியோர்களை தரப்பினராக சேர்க்க கேட்டுக்கொண்டதன்பேரில் எங்களை வா.சா.6ல் தரப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி சேர்த்த காரணத்தினால் மட்டுமே வாதிக்கு தாவா 3வது அயிட்ட சொத்தில் எவ்வித உரிமையும் வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

**8, 9 பிரதிவாதிகள் 6, 7 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**<u>14, 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. எனக்கும், என் அப்பாவிற்கும் பட்டா எண்.235ன்படி பாத்தியப்பட்ட அயிட்டம் 1 மற்றும் 2வது தாக்கு சொத்தின் ரீ.ச.எண்.267/2 சொத்தின் செக்குப்பந்திக்குட்பட்ட 35 செண்ட் பூமியை பிரதிவாதிகள் 13 முதல் 16 ஆகியோருக்கு உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு கிரயம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். கிரயம் பெற்ற தேதியிலிருந்து மேற்படி 13 முதல் 16 பிரதிவாதிகள் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு 13 மற்றும் 15ம் பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட பங்கில் பொதுவில் 3ம் நபர்களுக்கு கிரயம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

2. அதன்பின்னிட்டு 14, 16 பிரதிவாதிகள், கிரயம் பெற்ற 3ம் நபர்களும் மட்டுமே மேற்படி சொத்துக்களில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும், எனது சகோதரர்களும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். அந்த ரியல் எஸ்டேட் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் தான் குடும்ப நன்மைக்காக அந்த சொத்துக்களை கிரயம் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.10 ஆவணமான கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள கிரயதொகையை நானும் என் குடும்பத்தாரும் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த தொகையை குடும்பசெலவிற்காக பயன்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான்.

3. வாதியும், 5ம் பிரதிவாதியும் இளவர்களாக இருந்தபோது அவர்களுக்காகவும் சேர்ந்து தான் கிரயம் செய்தோம் என்றால் சரிதான். அதனால் வாதி, 5ம் பிரதிவாதி மற்றும் என் குடும்பத்தார் அனைவரையும் வா.சா.10 ஆவணம் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

<u>5ம் பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. பரம்பரைபரம்பரையாக எனது குடும்பம் விவசாயக்குடும்பம் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள், விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலம் எனக்காக மட்டுமல்லாமல் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி மற்றும் 5ம் பிரதிவாதியின் தாயார் மற்றும் எனக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 1991ம் வருடம் நடந்தது. திருமணத்திற்கு பின்னிட்டு 12 வருடம் சேர்ந்து வாழ்ந்தோம்.

2. என்னுடைய மூத்த மகனான தினேஷ்குமார் தான் 5ம் பிரதிவாதி. இளைய மகள் வாதி என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு 13 வருடங்கள் கழித்து HMOP.NO.140/2005 என்ற மனுவை விவாகரத்து கோரி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு விவாகரத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விவாகரத்து ஏற்பட்ட சமயத்தில் 5ம் பிரதிவாதி மற்றும் வாதிக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 5, 7 வயது இருக்கும்.

3. விவாகரத்து ஏற்பட்டு பிரிந்த பிறகு வாதி மற்றும் 5ம்பிரதிவாதி ஆகியோர் தன்னுடைய தாயாருடன் வசித்து வந்தார்கள். வாதி மற்றும் 5ம்பிரதிவாதி எங்கு என்ன படித்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இருவரின் படிப்பு செலவுக்கு நான் பணம் கொடுத்து உதவினேன். வாதி மற்றும் 5ம்பிரதிவாதிக்கு எந்தெந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. விவாகரத்திற்கு பின்னிட்டு வாதி மற்றும் 5ம்பிரதிவாதியுடன் எனக்கு போக்குவரத்து இல்லை என்றால் சரிதான். வாதி மற்றும் 5ம்பிரதிவாதி பெயரில் எந்தவித தொகையும் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தா மற்றும் என் அப்பாவிற்கு படிப்பறிவு இல்லை என்றால் சரிதான். விவாகரத்திற்கு பின்னிட்டு நான் எந்த திருமணமும்

செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் திருமணம் செய்து கொண்டேன். தற்போது நான், எனது மனைவி மற்றும் தாயாருடன் வசித்து வருகிறேன். 2ம் திருமணத்தின் மூலம் எனக்கு எவ்வித குழந்தையும் பிறக்கவில்லை. 14 அயிட்டச்சொத்துக்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் மொத்தம் 13 ஏக்கர் ஆகும்.

5. தற்போதைய நிலையில் தாவா சொத்தில் எனக்கு எவ்வளவு பங்கு பாத்தியம் உள்ளது என்றால் என்னுடன் சேர்த்து மூன்று பேருக்கும் 2 ஏக்கர் தான் உள்ளது. எனக்கும், என் மனைவிக்கும் விவாகரத்து செய்தபிறகு வாதி மற்றும் 5ம்பிரதிவாதியுடன் எனக்கு விரோதங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**5ம் பிரதிவாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**